**கவனிக்க.**- *13.01.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1742 - 2012 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2012.01.20

*1742 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 14 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) இலங்கை முதலீட்டுச் சபை (திருத்தும்) சட்டமூலம் 2011, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க.**- (ii) இலங்கை தொழில்வாண்மையிலான சமூகப் பணியாளர்களின் ஒன்றியம் கூட்டிணைத்தல் சட்டமூலம் 2012, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**கவனிக்க.**- (iii) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் 2011, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, சனவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நானாவித அறிவித்தல்கள்

**மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்**

(அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது)

இல. 12, பைவ் வீதி, கொழும்பு 00500 என்னும் முகவரியைச் சேர்ந்த அல்ற் பிரெஷ்டெக்ஸ் காமன்ட்ஸ் பினிஷிங் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் விடயத்திலும் ;

வழக்கு இலக்கம் : மே. நீ. குடியியல் 60/2011/சீஓ

அத்துடன்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 270 (உ) மற்றும் (ஊ) என்பதன்கீழ் அல்ற் பிரெஷ்டெக்ஸ் காமன்ட்ஸ் பினிஷிங் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்டை நீதிமன்றத்தால் ஒடுக்குவதற்கான விண்ணப்பத்தின் விடயத்திலும் ;

இல. 33, கட்டுகுறுந்த வீதி, மொறட்டுவை என்னும் முகவரியைச் சேர்ந்த இன்டஸ்ட்ரியல் வொஷிங் (பிறைவேட்) லிமிட்டெட்

...................மனுதாரர்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட அல்ற் பிரெஷ்டெக்ஸ் காமன்ட்ஸ் பினிஷிங் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்டை மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் கொழும்பில் நடைபெறுவது) ஒடுக்கப்படுவதற்கான விண்ணப்பம் 2011, திசெம்பர் 8 ஆந் திகதி மனுதாரரான இல. 33, கட்டுகுறுந்த வீதி, மொறட்டுவை என்னும் முகவரியைச் சேர்ந்த இன்ட்ஸ்ட்ரியல் வோஷிங் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டது என்றும் இதில் குறித்த மனு 2012, பெப்புருவரி 21 ஆந் திகதி சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதெனவும் சொல்லப்பட்ட மனு சம்பந்தமாக சொல்லப்பட்ட கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது ஆதரவு அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்க விரும்பின் விசாரணையின்போது நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அந்நோக்கத்துக்கான பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் சொல்லப்பட்ட கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழ்க் கையொப்பமிட்டவர்களினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக் கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

திருவாளர்கள் சின்னத்துரை சுந்தரலிங்கம்,
அன்ட் பாலேந்திரா சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளும்,
282/4-6, டாம் வீதி, கொழும்பு 01200
தொலைபெசி இல. : (011) 2544400

**குறிப்பு**.- மேற்குறித்த மனுவின் விசாரணையின்போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வாராயின் அவர் அல்லது அவரின் அல்லது அவர்களின் நோக்கம் பற்றிய அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணிகள் திருவாளர்கள் சின்னத்துரை சுந்தரலிங்கம் அன்ட் பாலேந்திரா நிறுவனத்துக்கு நேரில் அல்லது கடிதம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். நபர்களின் பெயர்கள் விலாசங்கள் அறிவித்தலில் குறிப்பிடப்படவேண்டும் அல்லது குழுமமாயின் குழுமத்தின் பெயர் விலாசத்துடன் நபரினால் அல்லது குழுமத்தினால் அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியால் (அவ்வாறு இருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் திருவாளர்கள் சின்னத்துரை சுந்தலிங்கம் அன்ட் பாலேந்திரா அவர்களுக்கு 2012, பெப்புருவரி 18 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

திருவாளர்கள் சின்னத்துரை
சுந்தரலிங்கம் அன்ட் பாலேந்திரா
மனுதாரர்களுக்கான சட்டத்தரணிகள்.

1-497

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.